**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 100/2022**
**நாள் 02/04/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 2-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - பொன்னையன் (எ) புருசோத்தமன் | த/பெயர் - அருணாச்சலம் |
| வயது - 45 | தொழில் - விவசாயம் |
| விலாசம் - எண் 2/32 வடக்கு தெரு, சின்னம்பேடு கிராமம் | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. வாதி எனது அண்ணன் ஆவார். அவர் அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வீட்டில் பெரியவர் அவர் என்பதால் வழக்கை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பானை வரவில்லை. இராஜேஸ்வரி எனது தாயார். இந்த வழக்கை எனது அண்ணன் தான் தாக்கல் செய்துள்ளார். ஜெயந்தி பணம் தரவில்லை என்பதால் தாக்கல் செய்துள்ளார். ஜெயந்தி 01.11.2019ல் ரூபாய் 60,000/- மற்றும் ரூபாய் 50,000/- எனது அம்மாவிடம் இருந்து வாங்கினார். மேற்படி இரு தொகைக்கும் சேர்த்து ஒரே புரோ நோட் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல.

2. இரண்டு புரோ நோட் எழுதி கொடுத்தார். எனது தாயார் மற்றும் தந்தை இறந்துவிட்டனர். எனது பெற்றோருக்கு நான், எனது அண்ணன் மற்றும் மற்றொரு சகோதரன் ஆகிய மூன்று நபர்கள் வாரீசுகள் ஆவர். எனது தாயார் இறந்த நிலையில் அவரது வாரீசுகளான நாங்கள் மூவரும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால்

எனது அண்ணன் பெரியவர் என்பதால் அவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனது சகோதரர் லட்சுமிபதி எனது அண்ணனை வழக்கு தாக்கல் செய்ய சொல்லவில்லை. எனது தாயார் சின்னம்பேட்டில் உள்ள எங்கள் வீட்டில் இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு எனது அண்ணன் லட்சுமிபதி குடியிருந்த தச்சூர் வேலம்மாள் ரெசிடன்சியில் உள்ள வீட்டில் இருந்தார் என்றால் ஒரு மாதம் அங்கு தங்கி இருந்தார். எனது தாயார் எனது அண்ணன் லட்சுமிபதி வீட்டில் தங்கி இருந்த போது பிரதிவாதி பணம் முழுவதையும் வட்டியுடன் சேர்த்து லட்சுமிபதி முன்னிலையில் எனது தாயாரிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

3. எனது தாயார் இறந்துவிட்ட நிலையில் மேற்படி லட்சுமிபதியை விசாரித்தால் உண்மை நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதி பணத்தை திருப்பி செலுத்தியபோது எனது தாயார் பணத்தை பெற்றுக்கொண்டு புரோ நோட்டை வீட்டிற்கு சென்று திருப்பி கொடுத்துவிடுவதாக கூறினார் என்றாலும் ஆனால் புரோ நோட்டை திருப்பி கொடுக்காமலே அவர் இறந்துவிட்டார் என்றாலும் அந்த புரோ நோட்டை நானும் எனது அண்ணனும் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது அண்ணன் கணேசன் ஒரே வீட்டில் சின்னம்பேட்டில் வசிக்கிறோம் என்றால் சரிதான். எனது தாயார் எனது வீட்டில் திடீர் என தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4. பிரதிவாதி வாதிக்கு எந்த பணமும் திருப்பி செலுத்தவேண்டியதில்லை என்றும் எனவே எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. லட்சுமிபதியை இந்த வழக்கில் சேர்த்தால் உண்மை நீதிமன்றத்திற்கு தெரியவந்துவிடும் என்பதால்

அவரை சேர்க்காமல் நானும் எனது அண்ணனும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**